RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s196

OPEN ACCESS

# புறநானூற்றில் ஔவையார் உணர்த்தும் அறங்கள்

பொ. கலைச்செல்வன் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001. தமிழ்நாடு, இந்தியா

# Virtues in Purananuru by Auvaiyar

**P. Kalaiselvan** [a, *]

[a] Research Department of Tamil, National College (Autonomous), Tiruchirapalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: pkselvan1986@gmail.com

Received: 09-08-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

If a man has good moral behavior then he must have been trained well by the elders. The virtues given by Auvaiyar in 'Purananuru' are to be followed by others to led a good life. Virtues among the people must be a natural outcome. When a person is hungry, he should be given food by the others. Giving food to others and satisfying a person's hunger is a kind of virtue. Virtue is the primary source of all human needs. Auvaiyar points out that one who have good thoughts and moral behavior will get plenty of goodness. Similarly, if the king of a country decides to help others, he will come forward to help no matter time or situation it is. The king thinks giving food and gifts to soldiers is the best virtue. At present people are selfish, they earn and spent it for themselves but the kings of Sangam period helped others by giving what they had. They are happy to help the needy. One should help others when they are in dangerous situation. The person who received the help will not forget it as long as he lives, charity is a gift, the land of the virtuous people will always be rich, king's helping mentality and the nature of helping the needy are discussed well in this article.

**Keywords:** Purananuru, Natural, Auvaiyar, Behavior, Gifts

## முன்னுரை

அறம் என்பது மக்களிடத்தில் இயல்பான பண்பாக அமைதல் வேண்டும். அது மக்களை மேம்படுத்தும்.உயிர்களின் அடிப்படை தேவைகளில் ஒன்று உணவு அவ்வுணவு அனைவருக்கும் கிடைக்கும் வகையிலான உறுதிப்பாடுகளை மனித இனம் கைக்கொள்ள வேண்டும். மனித வாழ்வு பிறர் இருப்பிலும் பிறரின் உதவியிலுமே நிகழ்ந்து கொண்டிருக்கிறது அதனால் பிறருக்கு உதவும் மனப்பான்மையை மனித சமுதாயம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். பிறர் துன்பம் துடைக்கும் பண்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தன்னிடமிருக்கும் உணவினைப் பசிக்கிறது என்று ஒருவன் கேட்கும் பொழுது அதை அவனிடம் கொடுத்து அவனின் பசியினைப் போக்க வேண்டும். அவ்வாறு செய்தால் உலகம் உன்னைப் போற்றும் இவை போன்ற ஔவையார் வழி பெற்ற சிந்தனைகளை இக்கட்டுரையில் நாம் காண்போம்.

## அறமும் கொடையும்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு அவ்வுணவு இல்லையென்றால் வறுமை நிலைக்கு அவன் தள்ளப்படுகின்றான்.இன்று உணவு இல்லாமல் தவிப்பவர்க்கு உதவுவதற்காக

அறக்கட்டளையும்,சங்கங்களும் இருந்தாலும் எல்லோருடைய பசியும் வறுமையும் முற்றிலும் நீக்க இன்னும் வழி காண இயலவில்லை ஆனால் சங்ககால மக்களின் வறுமை நிலையைப் போக்குவதற்கு மன்னர்கள் முன்னுரிமை அளித்தனர். ஔவையார் தன் பாடல் ஒன்றில் மக்களின் வறுமையை மன்னன் போக்கியது பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன கடையெழு வள்ளல்களில் ஆய்அண்டிரனின் கொடைத் தன்மையை இங்கு,

"தடவு நிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்

மடவன் மன்ற செந்நாப் புலவீர்!

வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த

அடகின்கண்ணுடையாகயாம்சில

அரிசி வேண்டினெம் ஆகத்தான் பிற

வரிசை அறிதலின் தன்னும் தூக்கி

இருங்கடறு வளைஇய குன்றத்தன்ன ஓர்

பெருங்களிறு நல்கி யோனே! அன்னதோர்

தேற்றா ஈகையும் உறுதிகொல்?

போற்றார் அம்ம பெரியோர் தம் கடனே"

என்று ஔவையார் விவரிக்கிறார் (Palaiyan, 2008). இப்பாடலின் விளக்கமானது, பலா மரங்கள் நிறைந்த நாஞ்சில் நாட்டுக்குத் தலைவன் மன்னன் சற்று அறிவில் குறைந்தவன்.செந்நாப் புலவர்களே,விறலியர் மலைப்பக்கத்தில் கொய்த கீரையுடன் சேர்க்க யாம் கொஞ்சம் துவரம்பருப்பை அவனிடம் வேண்டினோம். பரிசிலருக்கு உதவும் அவன் எம் வறுமையைக் கண்ணுற்று மலைபோன்ற யானையைப் பரிசாக அளித்தான். இப்படிப்பட்ட கொடைத் தன்மையும் உளதோ? பெரியோனாகிய அவன் முறையறிந்து செய்யானோ? என்று அமைகிறது. இதில் உணவில்லாதவர்க்கு உணவு அளிப்பதை விட்டுவிட்டு யானையைப் பரிசாக ஆய்அண்டிரன் கொடுத்து விட்டானே என்று குறை கூறுதல் இப்பாடலில் இருக்கிறது இவை,பாடலில் நயமும், சுவையும், ஈர்ப்பும் ஏற்படுத்துகிற கூறுகளாகும்.மன்னனைக் குறை கூறுவது போல தோன்றும் இப்பாடலின் உள்ளார்ந்த செய்தி ஆய்அண்டிரனின் மிக உயர்ந்த கொடைத்திறனைச் சிறப்பிப்பதாக உள்ளது.

## அறம் சான்ற நிலம்

அறத்துடன் வாழ்பவோரின் நிலம் என்றும் பசுமைமாறாததாக வளமுடன் இருக்கும்.அப்படிப்பட்ட நிலத்தினை இங்கு,

"நாடா கொன்றே காடா கொன்றே

அவலா கொன்றே மிசையா கொன்றே

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே!"

என்ற பாடல் வழி,ஔவையார் விளக்குகிறார் (Palaiyan, 2008). நிலப்பரப்பு மக்கள் வாழும் வளமான நாடாக இருந்தாலும்,மரங்கள் அடர்ந்த காடாக இருந்தாலும்,பள்ளமாக இருந்தாலும், மேட்டுப்பகுதி ஆக இருந்தாலும் அதனால் அதற்குப் பெருமை இல்லை. நற்பண்பும், நற்செயல்களும் நிரம்பிய ஆடவர்கள் நிரம்பி உள்ள பகுதியே நல்ல நிலமாகும் என்கிறார் ஔவையார். இதனைப் போன்று வள்ளுவரும்,

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்

குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்"

என்கிறார் (Manickannar, 2007). நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பயிர்கள் விளையும் அதுபோல குலத்தின் தன்மைப் பொருத்து சொல்லும் வெளிப்படும் என்கிறார். நல்ல பண்பும், நல்ல செயல்களும் செய்பவரின் நிலம் செழித்து வளமுடன் காணப்படும்.என்பது இதன் மூலம் புலப்படுகிறது. ஒரு நாட்டில் வாழும் மக்கள் சான்றோராக, உழைப்பாளிகளாக விளங்குவார்களேயானால் அந்நாடு உயர்ந்தோங்கிய நாடாகத் திகழும்என்ற நிலை பேறுடைய உண்மையை வள்ளுவர்,

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்

மீக்கூறும் மன்னன் நிலம்"

என்கிறார் (Manickannar, 2007).

## எங்கும் உணவு

உணவு பசியைப் போக்கும் தன்மையது. உணவு எப்படிக் கிடைக்கும் என்றால் அதைத் தேடிச் சென்றால் தான் கிடைக்கும். அப்படித் தேடிச் செல்லவில்லை என்றால் பசியே நம்மை அழித்துவிடும். பசித்துன்பம் மக்களுக்கு ஏற்படாதவாறு இயன்ற வகையில் சங்க மன்னர்கள் மக்களுக்கு உணவு அளித்தனர். பசித்தோர் எங்கிருந்தாலும் உணவு அவர்களுக்கு வழங்கப்பட்டது.இவ்வுண்மை ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத் தன்மையைக் கூறுவதில் வெளிப்படுகிறது. மன்னர்களின் உணவளிக்கும் பண்பு ஒரு பொதுமை அறமாக விளங்கியது என்பதையும் இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

"வாயிலோயே! வாயிலோயே!

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி

வயங்குமொழிவித்திதாம்

உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து

வரிசைக்கு வருந்தும் இப்பரிசில்வாழ்க்கைப்

பரிசிலர்க்கு அடையாவாயிலோயே!

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி

தன் அறியலன்கொல்?என்னறியலன்கொல்?

வறுந்தலை உலகமும் அன்றே அதனால்

காவினெம் கலனே!சுருங்கினெம்கலப்பை

மரங்கொல் தச்சன் வைகல் சிறாஅர்

மழுவுடைக்காட்டகத்து அற்றே!

எத்திசைச் செல்லினும், அத்திசைச் சோறே"

என்பது மேற்கண்ட செய்திகளைத் தரும் பாடலாகும் (Puliyur kesigen, 1958). இதன் விளக்கமாவது, வாயில் காப்போய்! வாயில் காப்போய்! வள்ளல் தன்மை நிறைந்தோர் செவியிடத்து நல்ல சொற்களைச் சொல்லித் தான் நினைத்த பரிசிலைப்பெறும் நெஞ்சமும் மேம்பாட்டைப்பெற வருந்தும் இயல்பும் உடைய பரிசிலர்க்குக் கதவினை அடையாத வாயில் காப்போய்! என்றும்,விரைந்த குதிரையைச் செலுத்தும் நெடுமானஞ்சி தன் தரத்தை அறியாதவனா? என் தரத்தை யாவது அறியாதவனா அவன்! இல்லாதவர்க்குக் கொடுக்கும் அறிவும்,புகழும் உடையோர் இவ்வுலகில் முற்றாக மறைந்து விடவில்லையே!! ஆகையால் யாம் யாழ்களைக் காவடியில் தூக்கினோம். இசைக்கருவிகள் வைக்கும் பைகளைக் கட்டினோம். மரத்தை வெட்டும் தச்சனின் கைத்தொழில் வல்ல மகன்கள் காட்டுக்குச்

சென்றால் அவர்களுக்கு மரங்களா கிடைக்காது? அதுபோல நாங்கள் எத்திசை சென்றாலும் அத்திசையில் எங்களுக்கு வேண்டிய சோறு கிடைக்கும்.என்று இப்பாடலில் புலப்படுத்துகிறார்.

உணவு என்பது ஒரு மனிதனுக்கு உயிர் வாழ மூல ஆதாரமாக உள்ளது.உணவுக் கொடுத்தவரே உயிர் கொடுத்தவர்.என்று மணிமேகலை உணவின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.இதை மணிமேகலை,

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்ற பாடல் அடியில் விளக்குகிறது (Venkatasamy Nattar, Avvai Duraisamy, 1982). ஒரு மனிதனுக்கு உயிர் கொடுத்தவர்கள் தாய், தந்தை அதற்கு அடுத்தபடியாக உணவுக்கொடுத்தவரே உயிர் கொடுத்தவர் என்ற உண்மை இதன் மூலம் புலப்படுகிறது.மேலும், மணிமேகலை பசி,பிணி நீங்க வேண்டும்.அனைவருக்கும் ஈயவேண்டும். என்ற மனித நேயப் பண்புகளை விளக்கும் விதமாக,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தனரோம்பலும்

துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை"

என்று குறிப்பிடுகிறது (Venkatasamy Nattar, Avvai Duraisamy, 1982). இந்த அறச்சிந்தனை சிலப்பதிகாரத்தில்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"

என்று கூறப்பட்டுள்ளது (Puliyur kesigen, 1960). மேற்கண்ட சான்றுகள் மூலம் உணவின் அருமையும், அது மனிதனுக்கு எவ்வாறு தேவைப்படுகிறது என்பதனையும், உணவு அளித்தலே மனித சமுதாயத்தின் தலையாய அறம் என்ற சிந்தனையையும் பெறமுடிகிறது.

## மன்னர்களின்அறம்

மன்னர்கள் உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தால் அது எந்த நேரமாக இருந்தாலும்,அவன் எப்படி இருந்தாலும் உதவ முன் வருவான்.ஔவையார் இதுபோன்ற ஒரு கருத்தினைத் தம் பாடலில் மொழிகிறார்.

"களர்ப்படு கூவல் தோண்டி, நாளும்,

புலைத்தி கழீஇய தூவெள் அறுவை

தாது எரு மறுகின்மாசுணஇருந்து

பலர் குறை செய்த மலர்த்தார் அண்ணற்கு

ஒருவரும் இல்லை மாதோ,செருவத்துச்

சிறப்புடைச் செங்கண் பகையவோர்

தோல் கொண்டு மறைக்கும் சால்புடையோனே"

என்பது அப்பாடலாகும் (Palaiyan, 2008). களர் நிலத்தில் கிணற்றைத் தோண்டி அந்நீரில் சலவையாளர் துவைத்த வெண்ணிற ஆடையை உடுத்திப் புழுதி படிந்த ஆடையோடு இருந்து பல பேருக்கும் பல உதவிகளைச் செய்தவன் மாலை அணிந்த இத்தலைவன்.இவனுக்குப் போர்க்களத்தில் துணையாக ஒருவருமில்லை. தன் கண்கள் சிவக்க ஒரு கேடயத்தால் பகைவரை அழிக்கும் படைக்கருவிகளைத் தடுக்கும் வலிமை உடையவனாய் இருக்கிறான் என்பது இப்பாடலின் விளக்கமாகும். அவ்வகையில் உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தால் தான் எப்படியிருந்தாலும் உதவி செய்வதை விட்டுவிடாமல் உதவி செய்து கொண்டு இருக்க வேண்டும் அது தான் சிறந்த

அறமாக இங்குச் சொல்லப்படுகிறது.அப்படிச் செய்த உதவி உலகத்தை விட மிகச் சிறந்தது என்று வள்ளுவரும்,

“காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது”

என்கிறார் (Manickannar, 2007). ஆக உதவியானது தக்க நேரத்தில் செய்யப்பட வேண்டும்.என்பது மிகச்சிறந்த வலுவான அறமாக் கருதத்தக்கது என்ற உண்மை இங்குப்புலப்படுகிறது.

## இரவலர்க்கு அளித்தல்

தன்னிடம் வந்த இரவலர்க்கு உணவு மிகுந்து இருக்கும் போது,இரவலர்க்கு முதலில் ஈந்து எஞ்சியதை உண்பவன் மன்னன். உணவு குறைந்திருக்கும் போது இருக்கும் உணவை இரவலர்க்கு ஈந்து தான் உண்ணாமலும் இருப்பவன் மன்னன். மேலும், தான் கொடுக்கக் கடமைப்பட்ட வீரர்களுக்குக் கொடுப்பதைவிட இரப்பவருக்கே கொடுப்பவன்.அறிவில்லாரோடு சமமாக உடனிருந்து உண்டு மகிழ்பவன்.இத்தகைய பண்புகள் நிறைந்தவன் வீட்டின் இறைப்பில் செருகப்பட்ட தீக்கடை கோலைப் போல தன் வலிமை தோன்றாமல் அடங்கியிருக்கவும் வல்லவன்.தீக்கடைக் கோலைக் கடைய வெளிப்படும் மிகுந்த தீயைப் போல தன் ஆற்றலை வெளிப்படுத்தும் இடத்தில் வெளிப்படுத்தவும் கூடியவன் அவன் என்று, ஔவையார் அதியமானைச் சிறப்பிக்கிறார். இதில் தனக்கு இருக்கும் உணவைக்கூட தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் இரவலர்க்கு ஈந்து விடும் அதியமானின் மிகச் சிறந்த அறம் வெளிப்படுத்தப்படுகிறது.அதியமான் பற்றி கூறப்படும் மிக உயரிய இந்த அறம் மன்னர்கள் அனைவரும் கைக்கொள்ள வேண்டிய அறமாக இருக்க வேண்டும் என்ற வலியுறுத்தலும் இப்பாடலில் அடங்கியுள்ளது.

“உடையனஆயின் உண்ணவும் வல்லன்

கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும்

மடவர் மகிழ்துணை நெடுமான் அஞ்சி,

இல்லிறைச்செரீஇய ஞெலிகோல் போலத்ய

தோன்றாது இருக்கவும் வல்லன் மற்றதன்

கான்றுபடுகனை எரி போலத்

தோன்றவும் வல்லன் தான் தோன்றுங்காலே”

என்ற கருத்தின் மூலம் புலப்படுத்துகிறார் (Puliyur kesigen, 1958). ஒருவன் தனக்கு மட்டும் தான் வேண்டும் என்று நினைக்கும் இவ்வுலகில் சங்க மன்னன் நெடுமானஞ்சி தனக்கு இல்லாவிட்டாலும் கூட பசித்தவருக்கும்,தன்னிடம் வந்த இரவலர்க்கும் உணவு வழங்க வேண்டும் என்ற உணர்வு உள்ளவனாக விளங்கினான். இது மக்களின் பொது அறமாக மாற வேண்டும்.மக்கள் இதனை அறிந்துகொள்ள வேண்டும். தன்னிடம் பசிக்கிறது என்று கேட்பவருக்கு உணவு வழங்க வேண்டும். அவ்வாறு உணவு வழங்கினால் தான் அம்மனிதன் அறத்துடன் இருப்பதாகக் கூற முடியும் என்றும் உலகம் அவனைப் பெருமைப்படுத்தும். பசித்தவருக்கு உணவு வழங்கவில்லை என்றால் உலகம் அவனைப் பெருமைப்படுத்தாது என்பதனை மேற்கூறிய பாடல் வழிஔவையார் புலப்படுத்துகிறார். இதுபோன்ற அறக் கருத்தைத் திருமூலர் கூறுவதையும் இங்கு இணைத்துக் காணலாம்,

“அவ்வுயிர்க்கன்பினை ஆயின் ஆய்தொரு

எவ்வுயிர் காயினும் இரங்கல் வேண்டும்”

என்கிறார் (Saravanan, 2020). அறத்துடன் கூடிய இரக்க தன்மை இருந்தால் தான் இவ்வுலகில் அனைத்து மனிதர்களும் இன்புற்று வாழ இயலும்.அறம் என்பது இல்லையேல் மனிதர்களிடையே

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை இழக்க நேரிடும் என்றும் இப்பாடல் புலப்படுத்துகிறது.

## முடிவுரை

இவ்வுலகு அறத்தின் அடிப்படையிலேயே நிலை பெற முடியும். பசித்தோருக்கு உணவளித்தல் முதன்மை அறம். உணவின் தேவை மனிதனுக்கு அவசியமானது. உணவளித்தல் கொடைத்தன்மை என்ற செயல் மூலம் நிறைவேற்றும் வழியைத்தமிழ்ச் சமூகம் கண்டுபிடித்துள்ளது. அறத்துடன் வாழ்பவரின் நிலம் வளமுடன் இருக்கும்.நிலப்பரப்பு வளமுடன் இருந்தால்தான் மக்களும் வளமுடன் வாழ்வார்கள்.உணவு தேவைப்படும் போது நமக்குக் கிடைக்க வேண்டும்.எங்குச் சென்றாலும் உணவு கிடைக்கும் என்ற உயர்ந்த அறம் சங்க இலக்கியத்தில் இருந்தது என்ற கருத்தும் ஆய்வின் வழி பெறப்பட்டுள்ளது. உதவி தேவைப்படும் பொழுது பெறப்பட வேண்டும்.அப்போது தான் உதவி செய்ததை யாரும் மறக்க மாட்டார்கள் என்ற கருத்து மன்னன் செய்த உதவி என்ற அறம் உணர்த்துகிறது.தனக்கு என்று வைத்துக் கொள்ளாமல் இரவலர்க்கும்,வறுமையுற்றவர்களுக்கும் கொடுத்தல் மன்னர்களின் உயரிய அறமாக விளங்கியது என்றச் செய்தி புலப்படுத்தப்பட்டுள்ளது. மனித வாழ்வுக்கு அறம் எவ்வளவு இன்றியமையாதது என்பது குறித்து இக்கட்டுரை வலியுறுத்துகிறது. அறத்துடன் செயல்பட்டால் மனிதன் இவ்வுலகில் பெருமைபட வாழ்வான் என்ற கருத்தும் பெறப்படுகிறது. இந்நிலவுலக இயக்கத்திற்கு அறம் மைய ஆற்றலாக உள்ளது.என்பதும் சான்றோர்கள் அறம் சார்ந்தவர்களாகவும் அறம் உள்ள நிலத்தில் தான்அவர்கள் வாழ்வார்கள்என்பதும் இக்கட்டுரையில் மொழியப்பட்டுள்ளது.பசிக்கு உணவளிக்கும் அறமே மிக உயரியது என்பதும் உணவளிக்கும் அறத்தை அனைவரும் கைக்கொண்டால் சமூகமும், உலகமும் மேன்மையுறும் என்ற கருத்தையும் இக்கட்டுரை உணர்த்துகிறது. ஒருவன் ஆபத்தில் இருக்கும் போது அவனுக்கு உதவி செய்தல் வேண்டும். அவ்வுதவியைப் பெற்றவன் தன் உயிர் உள்ளவரை அதை மறக்கமாட்டான் என்றச் சிந்தனை இக்கட்டுரையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இருப்பதை இயலாதவர்க்குக் கொடுக்க வேண்டும் என்ற அறக் கருத்தையும் கூறி இக்கட்டுரை நிறைவடைகிறது.

## References


Manickannar, V.S. (2007) Thirukkural Mollamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Palaiyan, A.P. (2008) Purananuru Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur kesigen, (1958) Purananuru Thelivurai, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur kesigen, (1960) Silappathigaram, Paari Nilaiyam, Chennai, India.

Saravanan, (2020) Thirumoolar Thirumanthiram, New Century Book House, Chennai, India.

Venkatasamy Nattar, N.M. Avvai Duraisamy, S. (1982) Manimegalai Mollamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License